[2005 ஏப்ரல் 4

முற்பகல் 11–30

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. விவேக் ஓபராய் அவர்களைப் பொறுத்தவரையில், விளம்பரம்தான் மிகவும் பெரிதாக உள்ளது. அவர் செய்தது மிகமிகக் குறைவு. அவர் உதவி புரிந்ததாகக் கூறப்படும் பகுதிகளில்கூட, அரசாங்கம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என்னென்ன சலுகைகளை, உதவிகளை அறிவித்ததோ, அவற்றையெல்லாம் செய்திருக்கின்றது. ஒட்டுமொத்தத்தில் அந்தப் பகுதிகளில் மக்களுக்கு வழங்கப்பட்ட உதவிகளில் 90 சதவிகிதம் அரசால் செய்யப்பட்டது என்றால், 10 சதவிகிதம்தான் திரு. விவேக் ஓபராய் அவர்களால் செய்யப்பட்டது. அவர் சொந்தப் பணத்தைச் செலவழித்து மக்களுக்கு உதவி செய்தார் என்பதெல்லாம் உண்மையான தகவல் அல்ல. மாறாக, என்ன நடந்தது என்றால், அரசு செய்த உதவிகளையெல்லாம் தான் செய்ததுபோல், அவர் விளம்பரப்படுத்திக்கொண்டு, அவர் தனக்கு ஒரு விளம்பரத்தைப் பெற்றுக்கொண்டார் என்பதுதான் உண்மை. அவரே, இப்போது பணம் கொடுக்க முன்வந்தவர்கள், Donors இப்போது பின்தங்கிவிட்டார்கள்; அதனால்தான் தமிழகத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை என்று அவரே ஒப்புக்கொண்டு பேட்டியளித்திருக்கின்றார் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஆகவே, தமிழகத்தில் அவரால் எதுவும் சாதிக்க முடியவில்லை என்பதற்காகத்தான் பாண்டிச்சேரிக்குச் சென்றிருக்கின்றார். (குறுக்கீடு)

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பரிதி என்ன? கேளுங்கள்.

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, திரு. பரிதி, இன்று காலையில்தான் என்னிடம் கொடுத்திருக்கின்றீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. எப்போது எடுத்துக்கொள்ள வேண்டுமோ அப்போது எடுத்துக்கொள்கின்றேன்.

திரு. பரிதி இளம்வழுதி: நாளைக்கு எடுத்துக்கொள்வதாகச் சொன்னால் போதும்.

2005 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதெல்லாம் இப்போது ஜோசியமா பார்க்க முடியும்? (சிரிப்பு) திரு. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, நீங்கள் சொன்னதற்கு முதல்வர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) அதிலே விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) அதிலே விவாதம் வேண்டாம். திரு. ஹேமச்சந்திரன், என்ன? (குறுக்கீடு) இல்லை நீங்கள் கேட்டதற்கு நிதியமைச்சர் அவர்களும் சொன்னார்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள். திரு. ஹேமச்சந்திரன் சொல்லுங்கள்.

(ஈ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பலத்த மழை காரணமாக உயிர் இழந்தவர்களுக்கு நிவாரண உதவி

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் கன்னியாகுமரி மாவட்டத்திலே மிகப் பெரிய அளவு மழை பெய்து, ஐந்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருக்கின்றார்கள் என்ற தகவல் வரப்பெற்றிருக்கின்றது. அந்தக் குடும்பங்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்கும், அதேபோன்று மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த நிவாரணம் கொடுப்பதற்கும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் இந்த அவையிலே கோரிக்கை வைத்தாலும், வைக்கவில்லையென்றாலும், அதற்காகக் காத்திருக்காமல், இத்தகைய இயற்கை இடர்ப்பாடுகளால் மரணங்கள் நிகழ்கின்றபோது, அவ்வப்போது விவரங்கள் இந்த அரசுக்கு வரப்பெற்றவுடனேயே, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கிக்கொண்டிருக்கின்றோம். மின்னல் தாக்கி இறந்தவர்கள், மழையால் வீடுகள் சரிந்து, இடிந்து விழுந்து அதனால் இறந்தவர்கள், இப்படிப் பல காரணங்களால் இறந்த பொதுமக்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கிக்கொண்டே இருக்கின்றோம்; தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கின்றோம். இப்போது ஏற்பட்ட இந்தப் பாதிப்புகளுக்கும் நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.